**தேர்தல் / அவசரம்**

எண். No.5/11/1/1/பதிவாளர்/திட்டம்/எம்/2014/10
புதுச்சேரி அரசு
கூட்டுறவுத்துறை
***

புதுச்சேரி, நாள் : 6 மார்ச் 2014

## சுற்றறிக்கை

பொருள் : நாடாளுமன்ற தேர்தல் 2014 —— மாதிரி நடத்தை விதிகள் நடைமுறைப்படுத்த அறிவித்தல் - தொடர்பாக.

***

எதிர்வரும் 24.4.2014 அன்று புதுச்சேரி யூனியன் பிரதேசத்தின் நாடாளுமன்ற உறுப்பினரைத் தேர்வு செய்ய தேர்தல் நடைபெறவுள்ளது. இது சம்மந்தமாக கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள நடவடிக்கைகளைப் பின்பற்றும்படி அறிவுறுத்தப்படுகிறது.

அ) சங்கத்திற்கு சொந்தமான கட்டடங்கள் மற்றும் சங்க கட்டுப்பாட்டில் உள்ள கட்டடங்களில் எந்தவிதமான அறிக்கைகளோ விளம்பரங்களோ அரசியல் கட்சிகள் / வேட்பாளர்கள் / தனி நபர் மூலமாக ஒட்டியோ / எழுதியோ இருத்தல் கூடாது. அப்படி ஏதாவது எழுதியோ / வரைந்திருந்தாலோ இதை 1966 ஆண்டு காவல் (புதுச்சேரி திருத்தம்) சட்ட எண் 34-B (VII) ன்படி அருகில் உள்ள காவல் நிலையத்தில் முறையீடு (complaint) செய்தல் வேண்டும். இச்சுற்றறிக்கை கிடைத்த பின்பு சங்கக் கட்டடங்களில் விளம்பரம் ஏதும் செய்யப்பட்டால் சங்கத்தின் காவலாளி அல்லது சம்மந்தப்பட்ட ஊழியர்கள் மீது நடவடிக்கைகள் எடுத்து அதன் விவரத்தை இவ்வலுவலகத்திற்கு தெரிவிக்க வேண்டும்.

ஆ) மேலும், சங்க ஊழியர்கள் எவரும் தேர்தல் பிரச்சாரங்களிலோ மற்றும் அது தொடர்பான நடவடிக்கைகளிலோ (தேர்தலில் வாக்களிப்பது தவிர) நேரிடையாகவோ அல்லது மறைமுகமாகவோ ஈடுபடக் கூடாது.

இ) சங்கத்திற்கு சொந்தமான வாகனங்கள் மற்றும் தளவாட பொருட்களைத் தேர்தல் தெடர்பான நடவடிக்கைகளில் ஈடுபடுத்தக் கூடாது (அரசின் தேர்தல் துறைக்குக் கொடுப்பது தவிர).

..2/-

ஈ) சங்கத்தில் தினக்கூலி / தற்காலிக அடிப்படையிலோ அல்லது எந்த முறையிலும் ஊழியர்களைப் பணியில் அமர்த்துவதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது. மேலும், சங்க ஊழியர்களுக்கு பணி நிரந்தரம் மற்றும் பதவி உயர்வு, ஊதிய உயர்வு போன்றவற்றிற்கும் தேர்தல் அறிவித்த நாளிலிருந்து தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்படும் வரை தடைவிதிக்கப்பட்டுள்ளது.

இவ்வுத்தரவு தேர்தல் முடிவுகள் அறிவிக்கும் வரை அமல்படுத்தப்பட வேண்டும் என்பதையும் அறிவுறுத்தப்படுகிறது.

மேலும், இத்துடன் இணைக்கப்பட்டுள்ள படிவத்தை உடனடியாக பூர்த்தி செய்து பதிவாளர் அலுவலகத்திற்கு 10.3.2014 மாலை 5.00 மணிக்குள் அனுப்பும்படி கோரப்படுகிறது.

மேற்படி நடவடிக்கைகளைப் பின்பற்றத் தவறினால், தேர்தல் விதித் தொடர்பாக எடுக்கக்கூடிய தண்டனைகளுக்குச் சங்க நிர்வாகம் முழு பொறுப்பேற்க நேரிடும் எனவும் அறிவிக்கப்படுகிறது.

(த. கரிகாலன்)
கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர்

இணைப்பு : மேற்கூறியவாறு.

பெறுநர்:

தலைவர் / நிர்வாகி / தனி அதிகாரி / மேலாண் இயக்குநர்
அனைத்து கூட்டுறவு சங்கங்கள், புதுச்சேரி & காரைக்கால்.

நகல்:

1. அனைத்து துணைப்பதிவாளர்கள், கூட்டுறவுத் துறை, புதுச்சேரி.
2. துணைப்பதிவாளர், காரைக்கால்.
3. இருப்பு கோப்பு.